TAM203C

# காமிக் கதை உருவாக்குதல் – ஆசிரியர் குறிப்பு

- இதுவரை கேட்ட கதையை காமிக் கதையாக மாற்றப் போகிறோம் என்று குழந்தைகளிடம் சொல்லுங்கள்.
- கதையின் முதல் படத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு, காமிக் கதைக்கான முதல் பிரேமைச் (Frame) செய்யத் தொடங்கலாம்.
- கதையின் இடம், கதாபாத்திரம், துணைபொருட்கள், செய்கைகள் மற்றும் உரையாடல்களை மாணவர்களிடமிருந்து பெற வினாக்களை எழுப்புங்கள். உதாரணமாக,
    - கதையில் முக்கிய கதாபாத்திரம் யார்?
    - அவர் எங்கு இருக்கிறார்?
    - ஒரு வரியில் அவரை விளக்கிக் கூறுங்கள்.
    - அவர் கையில் என்ன வைத்திருந்தார்?
    - அவரைச் சுற்றி/ அந்த இடத்தில் என்னென்ன பொருட்கள் இருக்கும்?
    - முதலில் அவர் என்ன சொன்னார்?
- மாணவர்களின் பதில்களைக் கொண்டு முதல் பிரேமை வடிவமைக்கலாம் – குச்சிப்படங்களை எளிமையாக வரைந்து அவ்விடத்திற்கான உரையாடலையும் எழுதவேண்டும்.

- **மாதிரி பிரேம்**




- மாணவர்களை 7 குழுக்களாகப் பிரித்து (மீதம் 7 படங்கள் உள்ளன) ஒவ்வொரு குழுவிற்கும் 1 படத்தைக் கொடுத்து ஒரு பிரேமை உருவாக்கச் சொல்லலாம். அவர்கள் கரும்பலகையில் உள்ள கதைவரிகளைப் பார்த்து உரையாடலாக மாற்றி எழுதலாம்.
- அனைத்து குழுவினரின் பிரேம்களையும் ஒன்றாக இணைத்து காமிக் கதை புத்தகத்தை வடிவமைக்கலாம்.